# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.
## Case No. CC.No. 53 of 2025
## Prosecution Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| **Name** | : கந்தசாமி | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(Accused Present)**

**Dated.22.01.2026**

**முதல் விசாரணை**

நான் P.K.அகரத்தில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். போன வருடம் 08 ம் தேதி 08 ம் மாதம் அன்று எதிரியின் தரிசு நிலத்திற்கு அருகே உள்ள மரத்தில் எனது மாட்டினை மதியம் கட்டினேன். மாலை கட்டியிருந்த மாட்டை அவிழ்த்துக் கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். இரவு 9 மணியளவில் மழை வருவது போல் இருந்ததால் வயலில் போட்டிருந்து வெங்காயத்தை மூடுவதற்காக நானும் எனது மனைவி பாப்பாத்தியும் சென்றிருந்தோம். சம்பவ இடத்திற்கு வந்த எதிரி ஓய ஒழுக்க என்று அசிங்கமாக திட்டி என் இடத்தில் எப்படி மாடு கட்டலாம் என்று பேசினார். அதனால் எனக்கு அவமானம் ஏற்பட்டது. பின்பு என் இடத்தில் மாடு கட்டினால் உன்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். பேசிக் கொண்டிருக்கும் போது எதிரி கட்டனால் எனது இடது தோள்பட்டை, கழுத்து, தலையின் பின்புறத்திலும் அடித்தார். பின்னர் இருசக்கர வாகனத்தின் மூலமாக திருச்சி SRM மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தேன். பின்பு நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்த போது போலீசாரிடம் மேற்படி

வழக்கு சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1/அ.சா.1** ஆகும். போலீசார் விசாரிக்க விவரம் சொன்னேன்.

<u>**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**</u>

எதிரி எனக்கு உறவினரா என்றால் இல்லை. பக்கத்து வயலை சேர்ந்தவர். எனக்கும், எதிரிக்கும் இடையே எவ்வளவு காலமாக பேச்சுவார்த்தை இல்லை என்றால் 5 வருடமாக பேச்சு வார்த்தை இல்லை. எனக்கும், எதிரிக்கும் இடையே ஏன் பேச்சு வார்த்தை இல்லை என்றால் வரப்பு தகராறு காரணமாக பேச்சு வார்த்தை இல்லை. சம்பவம் நடந்த அன்று தான் எதிரியுடன் பேசினேன் என்றால் சரிதான். இருவரும் கெட்ட வார்த்தையால் பேசிக் கொண்டோம் என்றால் சரிதான். எதிரி என்னை எந்த ஆயுதத்தால் தாக்கினார் என்றால் கட்டானால் தாக்கினார். எந்த கட்டானால் தாக்கினார் என்றால் அதை நான் பார்க்கவில்லை. எனது மனைவி எவ்வளவு நேரம் கழித்து சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் அரைமணி நேரம் கழித்து வந்தார். சம்பவம் நடந்த இடம் தண்ணீர் தொட்டி அருகே என்றால் சரிதான். தண்ணீர் தொட்டிக்கு அருகே கல் உள்ளது என்றால் சரிதான். அந்தக் கல்லில் நான் விழுந்து தான் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் சுமார் அரைமணி நேரம் நடந்தது. எதிரி என்னை அடிக்கவில்லை என்றாலும், நான் கல்லில் விழுந்ததினால் தான் காயம் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. நான் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**/உண்மை நகல்/**

ARUNACHALAM
Digitally signed by ARUNACHALAM
Date: 2026.01.22 17:57:28 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 53 of 2025**

**Prosecution Witness : PW2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பாப்பாத்தி | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(Accused Present)**

**Dated.22.01.2026**

**முதல் விசாரணை**

நான் P.K.அகரத்தில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். போன வருடம் 8ம் மாதம் 8ம் தேதி எதிரியின் தரிசு நிலத்திற்கு அருகில் உள்ள வேப்ப மரத்தில் மதியம் அ.சா.1 மாட்டினை கட்டினார். மாலை 5 மணியளவில் கட்டியிருந்த மாட்டினை நாங்கள் வீட்டிற்கு ஓட்டி சென்றுவிட்டோம். இரவு 9 மணியளவில் மழை வருமாறு இருந்ததால் எங்களது காட்டிற்கு நானும், அ.சா.1ம் வெங்காயத்திற்கு சாக்கு போடுவதற்காக சென்றிருந்தோம். அப்போது அங்கு வந்த எதிரி என்னையும், அ.சா.1யையும் பார்த்து புண்டாமவளே என்று அசிங்கமாக திட்டினார். அதனால் எங்களுக்கு அவமானம் ஏற்பட்டது. நாங்கள் ஏன் இப்படி பேசுகிறாய் என்று கேட்டதற்கு உங்களை கொன்றுவிடுவேன் என்று எதிரி மிரட்டினார். எதிரி கட்டானால் அ.சா.1ன் இடது தோள்பட்டை, தலை மற்றும் கழுத்தின் பின்புறம் அடித்தார். பிறகு போக்கு வண்டியின்

மூலமாக SRM மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அ.சா.1 சேர்க்கப்பட்டார். கோயில் நிலத்தினை குத்தகைக்கு கேட்டதால் அதில் ஏற்பட்ட முன்விரோதத்தின் காரணமாக எதிரி மேற்படி வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார். போலீசார் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

எங்களது வீட்டிற்கும், எங்களது வயலுக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 1 கி.மீ இருக்கும். எதிரியின் வீடு வயலிலேயே உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிலிருந்து வயலுக்கு எப்படி செல்வேன் என்றால் இருசக்கர வாகனத்தில் செல்வேன். சம்பவ தினத்தன்று வயலுக்கு எப்படி சென்றேன் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றேன். சம்பவம் நடந்த நேரம் என்னவென்றால் இரவு 9 மணி ஆகும். சம்பவம் நடந்த இடத்தில் வெளிச்சம் இல்லை என்றாலும் இருட்டாக இருந்தது என்றாலும் சரிதான். நான் எந்த வாகனத்தின் மூலம் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் போக்குவண்டியின் மூலம் சென்றேன். மருத்துவரிடம் காயம் எவ்வாறு ஏற்பட்டது, எந்த ஆயுதத்தால் தாக்கியதால் ஏற்பட்டது என்ற விவரத்தை நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். போலீசாரிடமும் காயம் எவ்வாறு ஏற்பட்டது, எந்த ஆயுதத்தால் தாக்கியதால் ஏற்பட்டது என்ற விவரத்தை நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். நான் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்து கொடுத்தேன். நான் தேதி குறிப்பிடாமல் கையொப்பம் செய்து கொடுத்தேன். எதிரி தாக்க பயன்படுத்தியதாக கூறப்படும் கட்டானை போலீசார் கைப்பற்றினார்களா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ இடத்தில் நான், அ.சா.1, எதிரியை தவிர வேறு யாரும் இல்லை

என்றால் சரிதான். எனது கணவருக்கு இரத்த காயங்கள் எங்கெங்கு ஏற்பட்டது என்றால் இடது பக்க தலை, கழுத்து, தோள்பட்டை ஆகிய இடங்களில் இரத்தகாயம் ஏற்பட்டது. அ.சா.1ம் எதிரியும் சண்டை போடும் போது நான் விலக்கவில்லை என்றால் சரிதான். எதிரி கட்டையால் எத்தனை அடி அடித்தார் என்பதை நான் சரியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெறும் போது நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் இரவு 10 மணிக்கு சென்றேன். காயம்பட்ட நபர் எனது கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரி அ.சா.1யை கட்டானால் அடிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.01.22 17:57:38 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 53 of 2025**

**Prosecution Witness : PW3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பிரபு | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(Accused Present)**

**Dated.22.01.2026**

**முதல் விசாரணை**

நான் P.K.அகரத்தில் வசித்து வந்து கார் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா,2 எனது அப்பா, அம்மா ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 08.08.2025 ம் தேதி மதியம் அ.சா.1 மாட்டினை எதிரியின் தரிசு நிலத்திற்கு அருகில் உள்ள வேப்ப மரத்தில் கட்டினார். மாலை மாட்டினை ஓட்டிக் கொண்டு வீட்டிற்கு சென்றுவிட்டார். இரவு 9 மணியளவில் மழை வருவது போல் இருந்ததால் வயலில் கொட்டியிருந்த வெங்காயத்தை மூடுவதற்காக அ.சா.1, அ.சா.2 வயலுக்கு சென்றிருந்தார்கள். அப்போது சம்பவ இடத்திற்கு வந்த எதிரி அ.சா.1, அ.சா.2 யை பார்த்து ஓய ஒழுக்க ஏன்டா என் இடத்துல மாட்டை கட்டினாய் என்று அசிங்கமாக திட்டினார். இனி என்னிடம் பிரச்சனை வைத்துக் கொண்டால் கொன்றுவிடுவேன் என்று எதிரி அ.சா.1, அ.சா.2 யை பார்த்து மிரட்டினார். எதிரியிடம் ஏன் கெட்ட வார்த்தையால் பேசுகிறாய் என்று அ.சா.1 கேட்டபோது அவர் கட்டானால் எனது அப்பாவின் இடது புற

தோள்பட்டை, தலை மற்றும் கழுத்தின் பின்புறத்திலும் அடித்தார். சம்பவம் நடைபெறும் போது நான் மண்ணச்சநல்லூரில் இருந்தேன். சம்பத்திற்கு மறுநாள் அ.சா.2 போன் மூலமாக தகவல் தெரிவித்தார். காயம்பட்ட எனது அப்பா SRM மருத்துவமனை சென்று சிசிக்சைக்கு சேர்க்கப்பட்டார். மறுநாள் சிகிச்சையில் இருந்த எனது அப்பாவை நான் சென்று பார்த்தேன். அவருக்கு இடது புற தோள்பட்டை, தலை மற்றும் கழுத்தின் பின்புறத்திலும் காயங்கள் காணப்பட்டது. போலீசார் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)– இல்லை**

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.01.22 17:57:46 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 53 of 2025**

**Prosecution Witness : PW4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: வெங்கடேஷ்** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated.22.01.2026**

**முதல் விசாரணை**

நான் P.K.அகரத்தில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 09.08.2025 ம் தேதி காலை 11 மணியளவில் நானும், கோவிந்தராஜ் என்பவரும் P.K.அகரத்தில் உள்ள எங்களது தோட்டத்திற்கு சென்று கொண்டிருந்த போது, போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதி கொண்டனர். அந்த பார்வை மகஜரில் நானும், கோவிந்தராஜ் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து **அ.சா.ஆ.2/அ.சா.4** ஆகும். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.3/அ.சா.4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)**

அ.சா.1 எனது உறவினரா என்றால் இல்லை. பக்கத்து தோட்டத்தை சேர்ந்தவர். நான் எத்தனை மணிக்கு எனது வயலுக்கு சென்றேன் என்றால்

காலை 11 மணிக்கு சென்றேன். நான் ஏற்கனவே வரைபடம் வரைந்து வைத்திருந்த தாளில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. தகராறு எந்த இடத்தில் நடந்தது என்பது குறித்து என்னிடம் கேட்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தை என்னிடம் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM
Digitally signed by ARUNACHALAM
Date: 2026.01.22 17:57:54 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி